www.ecourtsindia.com

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, TIRUCHIRAPPALLI**
**C.C.212/2015**

Deposition of witness வா.சா.1

Name : ராஜரத்தினம்
Father Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act of 1969 of the day of 02.11.2021.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் 11.08.1987 அன்று திருச்சி தஞ்சை மாவட்ட விநியோகஸ்தர் சங்கத்திலிருந்து நீக்கப்பட்டுவிட்டேன் என்றால் சரியல்ல. அவ்வாறு நீக்கப்பட்டதற்கு எனக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண். 1128/1996 ல் 06.06.2011 அன்று தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணைதான் மேற்படி அசல் வழக்கு எண். 1128/1996 ல் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். தீர்ப்புரை சான்றிட்ட நகல் எ.சா.ஆ.6. தீர்ப்பாணை சான்றிட்ட நகல் எ.சா.ஆ.7. என்னை 11.08.1987 அன்று திருச்சி தஞ்சை மாவட்ட விநியோகஸ்தர் சங்கத்திலிருந்து நீக்கப்பட்டதை எதிர்த்து நான் எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லையென்றால் அந்த தீர்மானத்தை எதிர்த்து இரண்டு கமிட்டி உறுப்பினர்கள் அசல் வழக்கு எண். 759/87 என்ற வழக்கை தொடர்ந்தார்கள் அதில் நானும் பிரதிவாதியாக உள்ளேன். திருச்சி தஞ்சை மாவட்ட விநியோகஸ்தர் சங்கம் 27.09.1993 அன்று கலைக்கப்பட்டுவிட்டதா என்றால் பொய்யான தீர்மானத்தினால் கலைக்கப்பட்டது. அசல் வழக்கு எண். 1128/1996 தீர்ப்புரையில் பக்கம் 18 ல் இரண்டாவது பத்தியில் "நான் உறுப்பினராக இருந்த காலத்தில் துணைவிதிகள் தவறு என்று ஆட்சேபணை எதுவும் செய்யவில்லை. 11.08.1987 ம் தேதி என்னை 3 ம் பிரதிவாதி சங்கத்திலிருந்து நீக்கியதாக அறிக்கை வந்தது. அந்தசமயத்தில் நான் இணைச்செயலாளராக பொறுப்பில் இருந்தேன்." என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். திருச்சி தஞ்சை மாவட்ட விநியோகஸ்தர் சங்கத்திலிருந்து என்னை நீக்கப்பட்டபிறகு நான் வேறு ஒரு சங்கத்தில் இணை

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNTP030016392015/truecopy/order-4.pdf

செயலாளராக பணியாற்றினேன் என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண். 1128/1996 தீர்ப்புரை பக்கம் 19 பத்தி 21ல் 3ம் பிரதிவாதி சங்கத்திலிருந்து வாதி நீக்கப்பட்டவுடன் 1993 ஆம் ஆண்டு 3ம் பிரதிவாதி சங்கம் கலைக்கப்பட்டபின்னர், ஆரம்பிக்கப்பட்ட மற்றொரு சங்கத்தில் வாதி இணைசெயலாளராக பொறுப்பில் இருந்தார் என்பது இந்த வழக்கில் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதியாக உள்ளது. வாதியும் மேற்படி சங்கம் குறித்து குறுக்குவிசாரணையில் கீழ்க்கண்டவாறு ஒப்புக்கொண்டுள்ளார். "என்னிடம் காட்டப்படுவது திருச்சி தஞ்சை மாவட்ட டிஸ்ட்ரிபியூட்டர் அசோசியேசன் பதிவெண் 65/1995 மெமரண்டம் ஆப் அசோசியேசன் நகல் என்றால் சரிதான். அதன் நகல் பி.சா.ஆ.1 ஆகும். அதில் இணை செயலாளர் என்ற முறையில் நான் கையெழுத்து செய்துள்ளேன்." என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது.

(எதிரிதரப்பில் வேண்டுகோளின்படி எதிரிதரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

Taken down by me/before me in open court,
interpreted/Read over to the witness and admitted
by the deponent to be correct.

Judicial Magistrate No.I,
Tiruchirappalli.

Copy

www.ecourtsindia.com

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNTP030016392015/truecopy/order-4.pdf